## மதச்சார்பின்மைக் கொள்கையைப் பாதுகாத்து

# சிறுபான்மையினருக்கு தி.மு.க. எந்நாளும் அரணாகத் திகழும்!

## திருச்சியில் நடைபெற்ற சிறுபான்மையினர் உரிமைகள் நல விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரை!

**சென்னை, டிச. 20 -**

**“மதச்சார்பின்மைக் கொள்கையைப் பாதுகாத்து சிறுபான்மையினருக்கு தி.மு.க. எந்நாளும் அரணாகத் திகழும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.12.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் திருச்சியில் நடைபெற்ற சிறுபான்மையினர் உரிமைகள் நாள் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெறும் சிறுபான்மையினர் உரிமைகள் நாள் விழாவிற்கு என்னுடைய வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்!

நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் சூழல்களையெல்லாம் பார்க்கும்போது, சிறுபான்மையினர் நலனில் அக்கறையும் – ஜனநாயகத்தின் மீது பற்றும் சகோதரத்துவத்தின் மீது நம்பிக்கையும் கொண்டவர்கள், இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது.

அந்த வகையில், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் அருட்தந்தை ஜோ அருண் அவர்கள் கல்விப் பணியோடு, அனைத்து மாவட்டங்களுக்கும் பயணித்து, சிறுபான்மையின மக்களுடைய கருத்துகளை கேட்டு, அவர்கள் நலனுக்காகச் செயல்படுகிறார். அவருடைய பணி சிறக்க வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர் சா.மு.நாசரை வாழ்த்துகிறேன்!

அதேபோல, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் நாசர் அவர்களும் தன்னுடைய துறையில் அரசு அறிவித்திருக்கும் திட்டங்கள் அனைத்தும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்து, சிறுபான்மையின மக்களுடைய நலன்களையும், உரிமைகளையும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம், சிறுபான்மைச் சமூகத்தின் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்களைப் பார்த்துப் பார்த்து பாசத்தோடு செய்வோம். அதனால்தான், வரலாற்றுப் பக்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், சிறுபான்மையின சமூகத்தின் காவலனாக போற்றப்படுகிறது.

பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞரும் காட்டிய வழியில், சிறுபான்மையினச் சகோதர – சகோதரிகளின் அரணாக பணியாற்றி வருகிறோம். உங்கள் இன்னல்களைத் துடைக்க தோழமையோடு உடன் நிற்கிறோம்!

இன்று கொண்டாடப்படும் இந்தச் சிறுபான்மையின உரிமை நாள் விழாவில், இஸ்லாமிய, கிறித்தவ, சமண, பௌத்த சமயங்களைச் சேர்ந்த தலைவர்களும், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஆங்கிலோ இந்திய மொழிச் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களும் பங்கேற்றிருப்பது சிறப்புக்குரியது.

### கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்!

இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகத்திற்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் சிலவற்றை நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்...

- 1989ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையம்!
- 1990ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலக்குழு!
- 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்!



- 2000ஆம் ஆண்டில் உருது அகாடமி!
- தமிழ்நாடு வக்பு வாரிய நிர்வாகச் செலவுக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் நிதி!
- ஹஜ் மானியம் அதிகரிப்பு!
- நபிகள் நாயகம் பிறந்த நாள் அரசு விடுமுறை!
- சிறுபான்மையின மாணவியர் விமானப் பணிப்பெண் பயிற்சி பெற இலவச வசதி!
- 2007ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இசுலாமியருக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு!
- 2007ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்ககம்!
- 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம்!

இப்படி, சிறுபான்மையின மக்களுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் செய்ததை நாள் முழுக்கப் பட்டியல் போட்டுக் கொண்டே இருக்கலாம்!

தலைவர் கலைஞர் அமைத்துக் கொடுத்த பாதையில் நடைபோடும் நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டும் என்றால்...

### திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்!

இசுலாமிய மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்தியபோது, தமிழ்நாடு அரசே அதை வக்பு வாரியம் மூலம் வழங்கும் என்ற அறிவிப்பு,

முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் மாவட்டம் தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 ஆயிரத்து 517 மகளிருக்கு 9 கோடியே 59 இலட்சம் ரூபாய் உதவித் தொகை,

தமிழ்நாடு முழுவதும் கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் மொத்தம் 3 ஆயிரத்து 345 மகளிருக்கு 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியுதவி,

தமிழ்நாடு முழுவதும் உள்ள 35 பழுதடைந்த தேவாலயங்களைச் சீரமைக்க 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மானியம்,

தேனி, விழுப்புரம் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் துவக்கம்,

கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் துவக்கம்,

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் என்று ஏராளமான நலத் திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மையினரைப் பாதிக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவித்தது, சிறுபான்மையினருக்கு எதிராக பேசிய அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தீர்மானம், வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற பா.ஜ.க.வின் திட்டத்திற்கு எதிராக சட்டப் போராட்டம் என்று தொடர்ந்து, சிறுபான்மையினர் உரிமைகளைக் காக்கச் செயல்பட்டு வருகிறோம்.

நாடு இன்றைக்கு இருக்கும் நிலையில், சிறுபான்மை சமூகத்தின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம்.

சிறுபான்மை மக்களின் உரிமையை, வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நம்முடைய திராவிட மாடல் அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

பெரும்பான்மையைப் பார்த்துப் பயப்படத் தேவையில்லாத சூழலில் சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்படுவதுதான் மதச்சார்பின்மை கொள்கையின் மகத்துவம். அதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு, தமிழ்நாடு.

இருந்தாலும், இந்திய அளவில் நிலவும் சூழல் நம்மை கவலைப்பட வைப்பதாக இருக்கிறது. அத்தகைய சூழலை எதிர்கொள்ள சிறுபான்மைச் சமூகத்தினர் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். அதற்கான அத்தனை ஆதரவையும், திராவிட முன்னேற்றக் கழகமும், நமது திராவிட மாடல் அரசும் எப்போதும் நல்கும்!

இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பின்மைக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்நாளும் எந்த நிலையிலும் பாதுகாக்கும். சிறுபான்மையினருக்கு என்றென்றும் அரணாகத் திகழும்! என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில்

## கிறிஸ்துமஸ் பெருவிழா - 2024!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

**சென்னை, டிச.20-**

**தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா - 2024 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் டிசம்பர் 23-அன்று நடைபெறுகிறது.**

**தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் பெருவிழா டிச.23- அன்று மாலை 4 மணியளவில் பெரம்பூர், டான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் (பிருந்தா திரையரங்கம் அருகில்) கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.**

இவ்விழாவிற்கு கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் வரவேற்றுப் பேசுகிறார்.

இவ்விழாவில் தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத் தலைவர் அருத்தந்தை ஜோ.அருண், ஏ.கிறிஸ்டியன் சாம்ராஜ் ( தமிழ்சுவிசேஷ லுத்தரன் திருச்சபை) திருமதி டாக்டர் கதிரொளிமாணிக்கம் (இ.சி.ஐ. சென்னை பேராயர், இந்திய சுவிசேஷ திருச்சபை) நீதிபதி அக்பர் அலி, (மேனாள், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி) திருத்தந்தை ஏ.சுவர்ணராஜ் (தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்)

த.இனிகோ இருதயராஜ் எம்.எஸ்., (தலைவர், கிருஸ்துவ நல்லெண்ண இயக்கம்),

பேரருள்பணி எச்.சர்மா நித்தியானந்தம் (பேராயர் சி.எஸ்.ஐ. வேலூர், பொறுப்பு பேராயர் சி.எஸ்.ஐ சென்னை பேராயம்),

கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் (தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர்), அருட்தந்தை மரிய ஆரோக்கியம் கனகா (ரெக்டார் (ம) தாளாளர் பெரம்பூர் டான் போஸ்கோ பள்ளி),

பிரவின் குமார் டாடியா (உறுப்பினர் தமிழ்நாடு மாநில சிறுப்பான்மையினர் ஆணையம்) ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுத் தலைவர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நன்றி கூறுகிறார்.

கவிஞர் ஜோ.அருள் பிரகாஷ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார்.

---

### ‘சாகித்ய அகாதமி’ விருது பெற்ற

## ஆ.இரா.வேங்கடாசலபதிக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 20 -

ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்கள் எழுதிய “திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908” என்ற நூலுக்கு சாகித்ய அகாதெமி விருது அறிவிக்கப் பட்டதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நூலாசிரியருக்கு வாழ்த்து தெரிவித்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**நாற்பதாண்டுகளாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களைப் பற்றிய ஆய்வில் மூழ்கி, அதன் விளைச்சலாக “Swadeshi Steam” நூலை ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்கள் கொண்டு வந்துள்ள வேளையில், அவரது “திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908” நூல் சாகித்ய அகாதெமி விருது பெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது!**

**கலகம் என்று அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் குறிப்பிட்டதைத் திருத்தி, நம் ‘எழுச்சி’ எனப் பதிவுசெய்த வரலாற்றாய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி அவர்களுக்கு என் வாழ்த்துகள்! பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையை

## 24 மணி நேரத்தில் நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

### குடும்ப உதவி நிதி ரூ.10 லட்சமாக உயர்த்தி உத்தரவு!

**சென்னை, டிச. 20 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பத்திரிகையாளர்களின் கோரிக்கையை 24 மணி நேரத்தில் ஏற்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி ரூ.5 இலட்சம் என்பதை ரூ.10 இலட்சமாக உயர்த்தி அறிவித்து உடனடியாக அரசாணை பிறப்பிக்கப்பட்டது!**

தமிழ்நாட்டில் நாள்தோறும் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள், அரசுத் திட்டங்கள் முதலிய வற்றையும், இந்திய அளவிலும், உலக அளவிலும் அன்றாடம் நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்களையும் திரட்டி, பத்திரிகைகள், ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு வழங்கித் தமிழ்நாட்டின் கல்வி, அறிவியல், அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரிபவர்கள் பத்திரிகையாளர்கள்.

மழை, வெள்ளம், புயல், போராட்டங்கள் நிகழும் காலங்களிலும் எதிர்பாராமல் ஏற்படும் இடையூறுகளைப் பொருட்படுத்தாது, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு பத்திரிகை உலகின் வேர்களாக விளங்குபவர்கள் செய்தியாளர்கள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த செய்தியாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிவுடன் செய்தியாளர்களுக்கும் அவர்களின் குடும்ப ங்களின் மேன்மைக்காகவும் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறார்கள்..

ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு ஒரு குழு மட்டுமே அமைக்கப்பட்டு, அது தொடர்பாக பிற நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் பத்திரிகையாளர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பத்திரிகையாளர் நலனைப் பேணிப் பாதுகாத்திடும் வகையில், பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், பத்திரிகைத் துறையின் வரலாற்றில் முதன்முறையாக பத்திரிகையாளர் நல வாரியம் அமைத்து உத்தரவிடப்பட்டு, நாளது தேதி வரையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 3,335 பத்திரிகையாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டுள்ளார்கள்.

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியமானது ரூ.10,000 என்பது ரூ.12,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியமும் ரூ.5,000 என்பது ரூ.6,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் பணிக்காலத்தில் இயற்கை எய்திடும் பத்திரிகையாளர்களின் பணியின் தன்மைக்கேற்ப, அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப உதவி நிதியானது ரூ.3 இலட்சம் என்பது ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பணிக்காலத்தில் உடல் நலன் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு உதவிடும் வகையில் வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.2 இலட்சம் என்பது ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, 17.12.2024 அன்று அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு பத்திரிகையாளர் மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது, தங்கள் மன்றத்தின் சார்பிலான சில கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர்.

தமிழ்நாடு பத்திரிகையாளர் மன்ற நிர்வாகிகளின் மனுவினைப் பெற்றுக் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பத்திரிகையாளர்களின் குடும்ப உதவி நிதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.5 இலட்சம் என்பதை 24 மணி நேரத்தில் ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டார்கள்.

இதற்குரிய அரசாணை நேற்று முன்தினம் (18.12.2024) பிறப்பிக்க ப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தமிழ்நாடு அரசு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நடத்தப்பட்ட சிறுபான்மையினர் உரிமைகள் தினம் நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் ஜோ.அருண் மற்றும் சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள், அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.




சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை தலைமை அலுவலகக் கூட்டரங்கில், நேற்று முன்தினம் (18.12.2024), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், பொதுப்பணித்துறையின் மின் பொறியாளர்களின் தொழில்நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், இணைத் தலைமைச் செயற்பொறியாளர் (மின் அலகு) தில்லைக்கரசி, கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.